விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமாகும்.

[புத்தகம் ௫௩] யாழ்ப்பாணம்:— விஷு வருஷ ஆவணி மீ உ௪ வ (1941 செப்டம்பர் 8 திங்கட்கிழமை) [இலக்கம் ௪௧]

## திருவள்ளுவர் சமயம்

மதுரைத் தமிழ்ச்சங்கப்பண்டிதர் வேலணைகிழார், திரு. க. வேந்தன் அவர்கள்

(முற்றொடர்)

இனித் திருவள்ளுவரை வைணவ சமயத்தினரல்லது பிரமசமயத்தின ரெனத் கொடுமெனின், மணிமேகலை சமயக் கணக்கர் தந்திறம் கேட்ட காதையில் "வைணவ சமயத்தினன் காதல் கொண்டு கடல்வண்ணன் புராண மோதினனா னன் காப்பென் றுரைத்தனன்" எனவும், பிரம சமயத்தினன் "பேருல கெல்லாம் பிரமவாதியோர் தேவனிட்ட முட்டையென் றனன்" எனவுங் கூறுகின்றமை யறியக்கிடத்தலின், அதனுள்வர்கள் முறையே திருமாலைக் காத்தற் கடவுளாகவும் ... முழுமுதற் றன்மை யொன்றுங் கூறிற்றிலர். [illegible]

"...னு—மூவாய முதலொருவன் மேயது முதுகுன்றே" எனவும், "வரியாய மலராலும் வையந்தன்னை—யுரிதாய வளர்தாலு முணருதற்கல்—கரியாலுமறியாத களரின் மேயான்—பெரியானென் றறிவார்கள் பேசுவாரே." எனவும் "மாவை யுரித்ததன் கொண்டங்க மணிகதவினை, வஞ்சர் மனத்திறைய நெஞ்சனு காதவனை,—மூவருருத்தன தா மூலமுதற் கருவை" எனவும், "படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை" எனவும், "தேவர் கோவறியாத தேவ தேவன் செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை—மூவர் கோனுய் நின்ற முதல்வன்" எனவும், "முந்து நடுவு முடிவு மாகிய மூவரறியாச்—சிந்து ..." [illegible]

## சீதையின் ஜனன ரகசியம் கற்பின் மகிமை

[மண்டி, வேலூர் ஸ்ரீமான் லோ. கு. நடராசசெட்டியார் அவர்கள்]

சீதை சிவபக்தித் தசரதற்கு மகனாகிய ராமருடைய தர்மபத்தினி. சிவபக்தனுன இராவணனுக்குப் பிறந்து, சகலகலா பிரவீணனான சனகனுல் வளர்க்கப்பட்டு, சானகி என்னும் பெயரால் சிறந்தாள். அநாக்ததியளையாள். அழகிலும் இனியாள். இவள் முற்பிறப்பின் வரலாறு பின்வருமாறு:-

முன்னர் பிரகஸ்பதி புத்திரரான குசத்துவசர் தவத்தில் உதித்த வேதவதி என்னும் பெண், திருமாலை விவாகஞ் செய்யவேண்டு மென்று நினைத்துத் தவஞ் செய்தாள். திக்கு விஜயஞ் செய்ய அவ் [illegible]

... தான். சீதை பிறக்க இலங்கை யழிய என்ற முதுமொழிக்கிணங்க, பின்னர் இவள் இராவணனால் அபகரிக்கப்பட்டு அவன் தன் இனத்தோடு மாண்டு போவதற்கும் இலங்கை அழிவதற்கும் காரணமானுள். தேவர்களும் மக்களும் இதம் பெறலாயினர். கற்பின் திறத்தை நிலைநிறுத்தினள்.

சை. சா. பரிபாலனம்.

## கொழும்பு விவேகானந்த சபை

### சமய பாடப் பரீக்ஷையில் விசேஷ பரிசு பெற்றோர்

சென்ற பங்குனி மாசம் நடைபெற்ற மேற்படி சபைச் சமய பாடப் பரீக்ஷைகளுட் பின்வரும் மாணவர் விசேஷ பரிசுகள் பெற்றனர்:

மேற் பிரிவு

1-ம் பரிசு வே. செல்லத்துரை கோப்பாய் சரவண பவானந்த வித்தி.

2-ம் பரிசு த. சுப்பிரமணியம் [illegible]

[illegible]

## பாடப் புத்தக விசாரணை

### கைலஞ்சம் கொடுத்துப் புத்தகங்களுக்கு அங்கீகாரம் பெறுகின்றனரா?

### காலியில்நடந்த விசாரணையிற்கூறப்பட்டசாக்ஷியங்கள்

காலி, செப் 2

பாடப்புத்தக விசாரணைக் குழுவின் விசாரணை நேற்று மீண்டும் காலியில் ஆரம்பமாயிற்று. அதுகாலை சாக்ஷியங் கூறப்பட்டபோது பெனத்தரு ஒருவரால் எழுதப்பெற்ற சிங்கள இலக்கணப் பாடப் [illegible]

... என். ராஜசிங்கம் சாக்ஷியங் கூறும் போது, கீழ் வகுப்புக்களில் அநேக பாடப்புத்தகங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாயும் சில பாடசாலைகளில் உபயோகிக்கப்படுவரும் போதனை முறையின் பயனாகப் பாடப் புத்தகத்தின் சில பகுதிகளை மாணவர் [illegible]

### வித்தியாகர்த்தர் எழுதிய புத்தகங்கள்

[illegible]

### கைலஞ்சம் வாங்கினர்களாம்

[illegible]

### வித்தியாதரிசியின் சாக்ஷியம்

[illegible]

## விபூதி மகிமை

[கொத்தமங்கலம் சிவஸ்ரீ சோ. நடராஜக்குருக்கள் அவர்கள் எழுதியது]

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில் தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி சிங்கார மான திருவடி சேர்வரே.

ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
ஈனவா டான்வேரகாம்
மாயப்படை வாராமே.

விபூதியென்பது திருநீறு. பஸ்மம், இரக்ஷை, நீறு, விபூதி, க்ஷாரம், பஸிதம், கவசம் அல்லது காப்பு என்பன ஒருபொருட் கிளவியாம்.

சகல பாவங்களையும் நீற்றலால் நீறு எனவும், எந்த ஐஸ்வரியத்தைக் காட்டிலும் மேலான ஐஸ்வரியமில்லையோ அப்படிப்பட்ட ஐஸ்வரி [illegible]

விபூதியை ஒவ்வொரு ஜீவனும் போகமோக்ஷங்களின் பொருட்டுத் தரிக்க வேண்டுமென்பதில் கோடிக்கணக்கான பிரமாணங்கள் உள. அவை பஸ்மஜாபாலம், காலாக்னிருத்ரம், தைத்திரீயம், ஸாங்க்யாயன குஹ்யம், போதாயனகல்ப ஸூத்ரம், வாஸுதேவோபநிஷத்து, ஸூதஸம்ஹிதை, ஸ்காந்தம், ஆதித்யபுராணம், மச்சபுராணம், கூர்மபுராணம், வாயுபுராணம், லிங்கபுராணம், மானவபுராணம், மனுஸ்மிருதி, பாராசரஸ்மிருதி, காமிகாகமம் முதலியனவாம். விரிவஞ்சி ஒவ்வொரு பிரமாணத்தையும் இங்கு விளக்காது விடுக்கப்பட்டது.

[illegible]

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஆவணி மீ உசஉ திங்கட்கிழமை

## பிரதிகூலமான கல்வி

"நூற்றுக்கு மேற்பட்ட வருடகாலத் தேன்றும் இந்த இலங்கையிலே, உலகம் பாராட்டத்தக்க ஒரு பெரியார், ஒரு சிறந்த நூலாசிரியர், ஒரு நாட்டியம் வல்லார், ஒரு பெரும் புலவர் தோன்றி விளங்கியதில்லையெனலாம். ஆதலால் கல்வி விஷயமாக அரசினர் இந்நாட்டில் சிறந்த காலமாகச் செலவிட்ட இலட்சக் கணக்கான பணம் வீண் போனதென்றே எண்ண வேண்டும்; இங்கு ஊட்டப்படுங் கல்வி போலிக்கல்வியென்றே சொல்லத்தக்கது"

எனக் கொழும்பு சகரசங்கத் தலைவராகிய டக்றர் சரவணமுத்து ஒரு சந்தர்ப்பத்திற் கூறியுள்ளார். டக்றர் சரவணமுத்து கூறியவை அத்தனையும் நிசமென்றே சொல்லலாம். எங்கள் தாய்நாடும் அயல்நாடுமாகிய இந்தியாவில் கல்வித் துறையிலே மேலே சொல்லப்பட்ட இலக்கணமமைந்த பலர் காலந் தோறும் தோன்றித் தோன்றி விளக்கினர்; இப்பொழுதும் விளங்குகின்றார்கள். இரவீந்திரநாத தாகூர் போன்ற கவிஞர், மகாத்மாகாந்தி போன்ற அரசியன்ஞானி, ராஜ ரவிவர்மாபோன்ற சித்திரக்கலை விற்பன்னர், சுரேந்திரநாத பனர்ஜியை யொத்த பேச்சாளர், ராமகிருஷ்ண பரமஹம்ஸரை நிகர்த்த துறவி, விவேகானந்தருக்கொப்பான சமயப் பிரசாரணர், சிசிஷ குமாரகோஷ் மதிலால்கோஷ் என்னுமிவர்களுக் கொப்பான பத்திராசிரியர்கள், டக்றர் ரும், டக்றர் போஸ், பேராசிரியர் ராமன் என்னுமிவர்களை நிகர்த்த தத்துவசாஸ்திரிகள், ரமசந்திரரை யொத்த தேச சரித்திர ஆராய்ச்சியாளர், அரவிந்தகோஷ் என்பார்க்கு இணையான தேசாபிமானம் பூண்ட துறவி, இன்னும் இந்த நேரத்தில் எமது ஞாபகத்திலில்லாச் செயற்கருஞ் செயல்களைச் செய்த நிரர் பலர் பிற்காலத்தில் விளக்கினர் சிலர். இப்பொழுதும் விளங்குகின்றனர். இதற்கெல்லாம் காரணமென்னை? பாரதநாட்டிலே ஆங்காங்குள்ள சர்வகலாசங்கங்கள் வாயிலாக ஊட்டப்படும் சாதியக் கல்வியேயாம்.

ஆனால் எங்கள் இலங்கைநாட்டிலெனிலோ மேலே சொல்லப்பட்ட திறமைகள் வாய்ந்த பெரியார் யாரும் இருந்தனரோ இருக்கின்றனரோ என வினவின் அணிவிரல் மடக்கிப்பண்ணிச் செல்வதற்கு ஒருவர்தானுமில்லை யெனலாம். என்னை! அறியாது கூறினீர், பிற்காலத்திலே ஆறுமுகநாவலர் போன்ற அறிஞர், சிவசம்புப் புலவர் போன்ற புலவரும் விளங்கினர்களே என ஆட்சேபஞ் செய்யின் இந்தப் பெரியார்கள் இலங்கை யரசினர் இந்த இலங்கை நாட்டு மக்களுக்கு ஊட்டிய கல்வி வாயிலாகக் கறயத் தேறியவர்களல்லரென மறுப்போம். ஸேர். பொன் இராமநாதன்போன்ற ஆங்கிலமொழி வாக்கு வல்லுனர் இலங்கையிலே தானே விளக்கினரேனின், அவர் அப்படி விளங்கியதும் இந்தியாவிலும் பிறநாட்டிலும் கற்ற கல்வியைக் கொண்டன்றி இலங்கை யரசினர் வாயிலாக ஊட்டிய கல்வியைக் கொண்டன்றென்று சொல்லுவேம்.

இனித் தமிழ்க்கல்வி விஷயமாகச் சொல்லுமிடத்து யாழ்ப்பாணத்திலே தமிழரசர்கள் ஆண்ட காலத்தில் மாத்திரமன்று, பறங்கியர், ஒல்லாந்தர் இந்நாட்டை யாண்ட காலங்களிலும் சிறந்த தமிழ்ப் புலவர்கள் விளங்கினார்களென்பது யாழ்ப்பாணப் புலவர் வரலாறு முதலிய நூல்களைப் படித்தறியக் கிடக்கின்றது. தமிழ்ப் புலவரின் தொகை இக்காலத்தில் அறவே அருகி விட்டதெனக் கூறினும் பிழையாகாது.

இக்காலத்துக் கல்வி பிரதிகூலமடைந்து விட்டதென டக்றர் சரவணமுத்து கவலைப்படுகின்றார். இக்கல்வி இவ்வளவில் மாத்திரம் நின்றுவிடவில்லை, சில பெருந்தீமைகளையுஞ் செய்து விட்டது; இக்காலத்தில் ஊட்டப்படும் தமிழ் ஆங்கிலக் கல்வியன் சமயம் சாதி பாஷை தேசம் என்னுமிவற்றின் கண் மக்களுக்கிருந்த அபிமானத்தைக் கெடுத்துவிட்டது; விவசாயம் வியாபாரம் கைத்தொழில் என்னுமிவைகளின் காரணமற்ற வெறுப்பை ஆக்கிவிட்டது; பெரியார் சிறியாரென்ற பேதத்தை அகற்றிவிட்டது; தெய்வங் கோள்கை, உதாரத்துவம், பெரியாரைப்பேணல் முதலாம் சிறந்த பழக்க வழக்க ஒழுக்கங்களை மறக்கச் செய்து நாத்திகமும் குதர்க்கமும் பேசத் தூண்டிவிட்டது. வயிற்றுப் பிழைப்புக் கல்வியாய் மாறிவிட்டது. இன்னும் பல அனர்த்தங்களுக்கு ஏதுவாக இக்கல்வி முறை வருமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. இலங்கைச் சர்வகலாசங்கம் ஸ்தாபிதமானாலும் இக்குறைகளும் கேடுகளும் ஆகுவயோ என்பது தான் ஆசங்கை. இங்கு ஸ்தாபித்தற்காக விருக்கும் சர்வகலாசங்கமும் இந்திய சர்வகலா சங்கங்களைப் போல தேசியமுறையில் நடத்தப்படுமேயானால் அக்கல்வி வாயிலாக இந்நாட்டு மக்களுக்கு ஏதும் நன்மை வருமெனக் காத்திருக்கலாம்.

## நடனமாதர் காருக்கு வெடி எறிந்தாராம்

### எதிரிகளில் ஒருவருக்கு வாறண்ட்

(நமது நிருபர்)

5-9-41

வண்ணார்பண்ணையில் வசிக்கும் தாசிகளாகிய ஜெகதாம்பாளும் தர்மாம்பாளும் மதனையோரும் சென்ற G. 1175-ம் இலக்கக் காருக்குத் திருநெல்வேலி அம்மன் கோவிலடியிலுள்ள பாலைக் குளத்தடியில் வைத்து கல்லுரிலே வசிக்கும் செல்லத்துரை-சோமசுந்தரமும் சினித்தம்பி-நடராசா அல்லது விதானையுமாக எறிவெடியால் அல்லது குண்டால் எறிந்ததாகப் பொலிசாருக்குக் கூறிய முறைப்பாட்டில் இன்று நீதிபதி முன்னிலையில் இருவர் சாக்ஷியங் கூறினர்.

கன்னாதிட்டியில் வசிக்கும் கார் டிறைவர் சின்னத்தம்பி-முருகேசு கூறியவற்றின் சாரமாவது:-

இச்சம்பவத்தன்று, நான் என்னுடைய G. 1175-ம் இலக்கக் காரைத் திருநெல்வேலி அம்மன் கோவிலடியாற் கோப்பாய்க்கு ஓட்டிச் சென்றேன். அப்போது அக்தக் காரில் ஜெகதாம்பாளும் தர்மாம்பாளும் வேறுபேருமாகக் காருக்குள் இருந்தார்கள். நான் இவர்களைக் கோப்பாயிலுள்ள ஒரு கோவிலுக்குக் கொண்டு சென்றேன். திருநெல்வேலி அம்மன் கோவிலுக்கருகாமையிலுள்ள பாலைக் குளத்தடியில, சோமசுந்தரமும் விதானையுமாக வந்து காரின் இடது முன்பக்கத்தில் எறிவெடிகளை எறிந்தனர். அவை காரில விழுந்தன. சத்தம் வன்காரில விழுந்தது. காரின் முன்னுக்குள்ள வெளிச்சத்தில் ஒன்று அணைந்து விட்டது. இந்த இடம் ஒரு தனிமையான இடம். நான் காரின் வேகத்தைக் குறைத்தேன். எதிரிகள் ஓடிவிட்டனர். நான் காரையுங் கொண்டு சுந்தராமி வீட்டிற்குச் சென்று சுந்தரமியையும் கூட்டிக் கொண்டு பொலிஸ் நிலையந் சென்றேன். அங்கே அவர்கள் எனது வாய்முறை பாட்டைப் பதிவு செய்தனர்.

இதன் பின்னர்த் தம்பையினை தர்மாம்பாள் கூறியதாவது:—

இச்சம்பவத்தன்று கோப்பாயிலுள்ள கோவிலொன்றுக்கு நடனத்திற்காகக் காரிற் சென்றோம். வழியிற் பாலைக் குளத்தடியிற் சோமசுந்தரமும் நடராசா அல்லது விதானையுமாக ஒரு மதவடியால் வந்து அவர்கள் வைக்குட் கொண்டுவந்த ஒரு வெள்ளை வஸ்துவைக் காரின் முன்புறத்தே எறிந்தனர். அது வெடித்த சத்தம் கேட்டது. நாங்கள் காரை விரைவாக ஓட்டும்படி சத்தமிட்டோம். எதிரிகளை எனக்கு மூன்று நாலு வருஷமாகத் தெரியும். பின்னர், எனது பாதுகாப்பாளராகிய சுந்தரமியையுங் கூட்டிக் கொண்டு பொலிஸ் நிலையஞ் சென்றோம். எனதுடைய வாய்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

நீதிபதி சோமசுந்தரத்தை விளக்கமறியலில் விட்டு நடராசாவுக்கு வாறண்டுவிட்டு முறைப்பாட்டை விசாரணை செய்வதை வருகிற 19-9-41க் திகதிக்குத் தவணையிட்டார்.

## கிணற்றுள் விழுந்து மரணம்

### தற்கொலையா? கொலையா?

ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்

4-9-41

வண்ணார்பண்ணை கிழக்கில வசிக்கும் பொன்னையா—குமாரசாமி யென்னும் 28 வயதுடையவர் பெரியகடைக்கணித்தாகவுள்ள "பவர் ஹவுஸ்" வளவுக்குள்ளிருக்கும் கிணற்றுக்குள் விழுந்து இறந்து கிடக்கக் காணப்பட்டார். இந்த மரணவிசாரணையை திரு. எஸ். ஐயம்பிள்ளை நடத்தியபோது இறந்தவரின் பெரிய தகப்பனாராகிய இளையதம்பி கலலதம்பி கூறியதாவது:—

இறந்தவர் எனதுடைய இளைய சகோதரனின் மகன். இவரைச் சென்ற 3-9-41 க் திகதி பகல் இரண்டு மணியளவில் பஸ்காலையிற் சந்தித்தேன். அவர் யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகத்துக்கு ஓடும் பஸ்களை முறைபார்த்து அனுப்பி வைப்பவர். இவருக்குச் சென்ற வருடம் மாருட்டமான குணம் ஏற்பட்டது. அதற்கு அவரைத் திருநெல்வேலியிலுள்ள சிவன்கோவிற் குருக்களிடம் கூட்டிச்சென்று தால் கட்டப்பட்ட பின், சுகமடைந்தார். இதற்குப் பின்னர் அவர் வழக்கம்போல தமது கடமையைச் செய்துவந்தார். திரும்பவும் முன்போல் அவருக்கு மாருட்டக்குணம் இருப்பதாக இத்திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அறிந்தேன். இறந்தவரிடம் காயங்கள் இருப்பதால் நான் இதில் ஐயுறவு கொள்கின்றேன். இறந்தவருக்குப் பகையாளிகள் யாரும் இருப்பார்களோ வென்று என்னாற் சொல்லமுடியாது.

வேறு சிலரும் வாய்முறைப்பாடு கூறினர். பிரேதத்தைச் சோதனை செய்த டாக்குத்தர் இறந்தவர் கிணற்றில் விழுந்தமையால ஏற்பட்ட மூச்சுத் திணறலால இறந்திருக்கக் கூடுமென அபிப்பிராயந் தெரிவித்தார்.

இம் மரணம் தற்கொலையெனக் கூறப்பட்டபோதிலும், பொலிசார் மேலும் விசாரணை செய்தபோது குமாரசாமியின்மரணத்தைப்பற்றிப் புளுக்குத்தித் தோட்டத்தில் வசிக்கும் நாகலிங்கம் — சோமசுந்தரத்தைச் சந்தேகத்தின்பேரில் பிடித்து வந்து நீதிபதி முன்னிலையில்விட்டு அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவைக் கேட்டனர். நீதிபதி அவரை வருகிற 9-9-41க் திகதி வரையும் விளக்கமறியலில் விட்டார்.

## மானிப்பாயிற் பணத்திருட்டு

### வேலைக்காரன் திருடியதாக ஒப்புக் கொண்டான்

4-9-41

மானிப்பாயில் வசிக்கும் கியாயதுரந்தரர் திரு. E. முருகேசபிள்ளை வீட்டில் மூன்று மாதமாக வேலைக்கு நின்ற 16 வயதுடைய A. O சுந்தோசில் என்பவன் அவருடைய அலுமாரியைத் திறந்து ரூபா 30ஐக களவாடிச் சென்றதாகக் குற்றஞ் சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜண்டால் ஒரு வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர். நவிண்டன் பெர்னுண்டோமுன்னிலையிற் றொடரப்பட்டது. இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

திரு. E. முருகேசபிள்ளை கூறியவற்றின் சாரமாவது:-

எதிரி என்னிடத்தில் வேலைக்கு நின்றான். என்னோடு மூன்று மாதகாலமாய் வேலைக்கு நின்றான். சென்ற 18-8-41 க் திகதி காலை அவன் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டான். காலையில் அவன் வீட்டில் இல்லாததை நான் கண்டதும் எனதுடைய அலுமாரியைத் திறந்து பார்த்தபோது, ஒரு தோறபைக்குள் வைக்கப்பட்ட மூன்று பத்து ரூபா நோட்டுகள் காணப்படவில்லை. எதிரி முன்னரும் இப்படியாக அலுமாரியைத்திறந்து காசைத் திருடியிருந்தான். நான் பொலிசாருக்கு இதனை அறிவித்தேன்.

பின்னர் பாபாசிங்கோனுயின என்னும் குறளி வித்தைக்காரன் கூறியதாவது:-

நான் கைக்கோளர் சந்தையடியில் வசிக்கிறேன். நான் இவ்வெதிரியைச் சென்ற 18-8-41 க் திகதி 7 மணியளவிற் சுன்னாகம் சந்தையிலுள்ள தேநீர்க்கடையொன்றிற் சந்தித்தேன். அவனும் தேநீர் குடிக்க வந்திருந்தான். நாங்கள் இருவரும் தேநீர் குடித்ததும், எதிரி ஓர் ஐந்து ரூபா நோட்டை எடுத்துக் கொடுத்து என்னுடைய தேநீர்க் காசையும் தன்னுடைய காசோடு சேர்த்துக் கொடுத்தான். நாங்கள் இருவரும் சிநேகமானோம். பின்னர், எதிரி தனக்குச் சில அணிகளை வாங்கினான். எதிரி எனக்குப் பின்னரும் ரூபா 25ஐக் காட்டினான். நாங்கள் இருவருமாக பஸ்ஸிற் கொழும்புக்குச் சென்றோம். நான் எதிரியிடம் காசு எப்படிக் கிடைத்ததென வினவியபோது எதிரி தான் எசமான் வீட்டிலிருந்து எடுத்து வந்ததாகக் கூறினான். பின்னர் எங்களைப் பொலிசார் பிடித்தனர்.

எதிரிமீது களவெடுத்ததாகக் குற்றஞ் சாட்டியபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டான். நீதிபதி எதிரியைக் கையில் அடையாளங் கொடுக்கும்படி கூறித் தீர்ப்புக் கூறுவதை வருகிற 11-9-41-ந் திகதிக்குத் தவணையிட்டார்.

## வங்கப் பிரதம மந்திரி வைஸ்ராயைக் காண்பார்

### மிஸ்றர் ஜின்னாவிடமிருந்தும் அழைப்பு

#### தேசியப் பாதுகாப்புச்சபையில் ஸ்தானம் வகிக்கும் விஷயம்பற்றி விவாதிப்பார்?

கல்கத்தா செப் 2— தேசிக் கலந்து பேசுவதற்காகப் பம்பாய்க்கு வரும்படி ஜனாப் ஜின்னாவிடமிருந்து தமக்குத் தந்தி கிடைத்திருப்பதாக மௌல்வி ஹக் இன்று பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார்.

இது தவிர இருவருக்கும் டெலிபோனில் நீண்டநேரம் விவாதம் நடந்தது. மௌல்வி ஹக் நாளை பம்பாய்க்குப் பிரயாணமாவார்.

ஜனாப் ஜின்னாவைச் சந்தித்துப் பேசியதற்குப் பிறகு வைஸ்ராயைக் காண்பதற்காக மௌல்வி ஹக் சிம்லாவிற்குச் செல்வாரென்றும் தெரிகிறது. மேற்கொண்டு என்ன செய்வதென்பது குறித்து அவர் வைஸ்ராயுடன் விவாதிக்கலாம். அதற்குப் பிறகுதான் தேசியப் பாதுகாப்புச் சம்பந்தமாக அவர் ஒரு முடிவுக்கு வருவாரென இப்பொழுது ஏறக்குறையத் திட்டமாகத் தெரிகிறது. இவ்வாரக் கடைசியிலோ அல்லது அடுத்தவார ஆரம்பத்திலோ அவர் வைஸ்ராயைச் சந்திக்கலாம்.

இதற்கிடையில் ஜனாப் ஜின்னா ஒழுங்கு நடவடிக்கை எடுக்கபடும் என்று பயமுறுத்துவதன் மூலம் மௌலவி ஹக்கை சிரப்பந்திக்கவோ அல்லது ஒரு முடிவுக்கு வருவதற்காக மௌல்வி ஹக்குக்குக் கொடுக்கப்பட்டுள்ள அவகாசத்தை இன்னும் நீடிக்கவோ செய்யலாம். ஜின்னாவின் பயமுறுத்தல் கண்டு ஹக் பயந்துவிடமாட்டாரென்று இங்கு பலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஏனெனில், ராஜிநாமாச் செய்துவிட்டால அதனால் வங்காளத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சமாளிக்கவேண்டியவர் ஹக்கே தவிர ஜின்னா அல்லது வங்கத்தில் அவருக்குள்ள ராஜ்ய நிலைமையைப்பற்றி ஜின்னா அறிந்தவரல்லர்.

### கூட்டுக்கக்ஷி கூட்டத்தின் வேண்டுகோள்

தேசியப் பாதுகாப்புச் சபையிலிருந்து மௌல்வி ஹக் ராஜிநாமாச் செய்வது சம்பந்தமான விஷயத்தைப்பற்றி யோசிப்பதற்காக இன்று நடந்த வங்க அசெம்பிளிக் கூட்டுக் கக்ஷிக் கூட்டத்தில மௌல்வி ஹக் வங்காளத்தின் நலனுக்காக இருப்பதில் தங்களுக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டதாகத் தெரிகிறது. விஷயத்தைப்பற்றி சமரஸமாக ஜனாப் ஜின்னாவுடன் விவாதிப்பதற்காகப் பம்பாய்க்குச் செல்லும்படி கூட்டம் மௌலவிஹக்கைக் கேட்டுக்கொண்டது.

### அஸாம் பிரதமமந்திரி ஜனாப் ஹக்கைக் கண்டு பேசினார்

கல்கத்தா, செப் 2

அஸாம் பிரதமமந்திரி ஸேர். முகமது ஸாதுல்லா தேசியப் பாதுகாப்புச் சபையிலிருந்து இன்னும் ராஜிநாமாச் செய்யவில்லையென்று தெரிகிறது. அவ் விஷயத்தைப்பற்றி அவர் இப்பொழுது வைஸ்ராயுடனும் ஜனாப் ஜின்னாவுடனும் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறார்.

தேக அசௌகரியம் காரணமாக இங்கு வந்திருந்த அவர் இன்று ஷில்லாங்குக்குப் போய்விட்டார். இங்கு இருந்தபொழுது அவர் மௌல்வி ஹக்கையும் ஏனைய தலைவர்களையும் கண்டு பேசினார்.

### பஞ்சாப் பிரதமமந்திரியின் உறுதி

சிம்லா, செப் 2

ஸர். சிக்கந்தர் இன்று லாகூருக்குப் பிரயாணமானார். பம்பாயில் நடந்த சம்பவங்களால் யுத்தம் சம்பந்தமாகத் தாம் கொண்டுள்ள மனோபாவத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லையென்று அவர் உறுதி கூறினார். நாளை அவர் யூனியனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் அங்கத்தவர்களைச் சந்திப்பார். ஸேர். சிக்கந்தரிடம் தங்களுக்கு நம்பிக்கையிருப்பதாக 15 நாட்களுக்கு முன்புதான் அவர்கள் தெரிவித்தனர். பம்பாய்க் கூட்டத்தில அதிலிருந்தும் விலகும்படி அவர்கள் லீகிலிருந்து ராஜிநாமாச் செய்வதாகத் தங்கள் ராஜிநாமாக்களையும் அவரிடம் கொடுத்தனர்.

கடைசித் தருணத்தில பம்பாய்க் கவர்னரின் கடிதத்தைத் தருவித்தது சம்பந்தமாகத்தால ஸேர். சிக்கந்தர் இப்பொழுது அவர்களுக்கு நிலைமையை விளக்க வேண்டும். பம்பாயில் வைஸ்ராயைக் கண்டு பேசியபொழுது ஜனாப்ஜின்னா மேற்படி கடிதத்தை அவருக்குக் காட்டினாரென்றும் அதைப்பற்றித் தாம் கவனிப்பதாக வைஸ்ராய் உறுதி கூறினாரென்றும் மேற்படி அங்கத்தவர்கள் சொல்லுகிறார்கள். வைஸ்ராய் சிம்லா போய்ச் சேர்ந்ததும் மேற்படி பேட்டியின் முழுவிவரத்தையும் ஸேர். சிக்கந்தருக்குத் தெரிவித்திருக்க வேண்டுமென்றும் அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். பல நாட்களுக்கு முன்பாகச் சிம்லாவிலிருந்து கிடைத்த செய்தியை ஆதாரமாகக் கொண்டே மேற்படி கடிதம் தயாரிக்கப்பட்டதாகத்தெரிகிறது. பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள் செய்த தவறு காரணமாக இப்பொழுது புதிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் எனினும் மேற்கொண்டு விவாதத்தை நீடிக்க யாருக்கும் இஷ்டமில்லையென்றும் கூறப்படுகிறது.

### இரண்டிலொன்றை முடிவு செய்யவேண்டிய நிலைமை

நாளைய மந்திரி கட்சியினர் கூட்டத்தில் என்ன நடக்குமென்பது தான் இப்பொழுது பிரதான கேள்வி. மொத்தமுள்ள 100 அங்கத்தவர்களில ஏறக்குறைய 80 பேர் முஸ்லிம்கள், இவர்கள் ஒன்று பிரதம மந்திரியின் முடிவை நிச்சயப்படுத்துவர் அல்லது தேசியப் பாதுகாப்புச் சபையிற பதவி வகிக்கும்படி அவருக்குப் புதிதாக ஆக்ஞை பிறப்பிப்பர். தாம் யூனியனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரா அல்லது லீகுக்காரரா என்பதை ஸேர். சிக்கந்தர் இறுதியாக முடிவுசெய்தே தீரவேண்டும். தேசியப் பாதுகாப்புச் சபையில் ஸேர். சிக்கந்தர் இருக்கத்தான் வேண்டுமென்று கட்சியினர் தீர்மானித்தால் அதனபான நிலைமை ஏற்படும், மோசம் செய்துவிட்டார் என்று ஜனாப் ஜின்னா கூறியிருப்பது கண்டு அவரை ஒரு தினுசாக ஆதரித்து வந்தவர்களிற் கூடப் பலர் ஆத்திரமடைந்திருக்கின்றனர். ஜின்னா அடைந்த வெற்றி அற்ப ஆயுளுடன் முடிந்தாலும் முடியலாம்.

## கோதுமைவிலையுயர்வு

கோதுமையின் விலை ஏறிக் கொண்டே வருவதில் இந்திய அரசாங்கம் பெரிதும் கவலைப்படுவதாக ஒரு வதந்தி உலாவுகிறது.

இப்பொழுது ஈரானுக்கு அதிகப்படியாகக் கோதுமை அனுப்ப வேண்டியிருப்பதால் இந்நாட்டில தட்டுப்பாடு ஏற்படலாம். ஏனைய நாடுகளிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்ய வசதிகள் காண்பதைப்பற்றி இனிப் பரிசீலிக்க வேண்டியிருக்குமென்று கூறப்படுகிறது.

இதன் பலனாகக் கோதுமை இறக்குமதி வரியைக் குறைக்க வழியுண்டா எனபதைப்பற்றியும் யோசிக்கவேண்டும். இந்தியக் காப்புவரிச் சட்டப் பிரகாரம் சட்டமியற்றுமல அரசாங்கத்துக்குள்ள அதிகாரத்தைக்கொண்டே மேற்படி வரியைக் குறைக்கலாமெனக் கூறப்படுகிறது.

# இந்தியச் செய்திகள்

## தற்பாதுகாப்புப் பயிற்சி

நாட்டின் பாதுகாப்புக்குரிய இராணுவ ஸிவில் சேவைகள் சம்பந்தமான முன்னேற்பாடு பற்றியும், நாட்டின் சாதாரண ஆண்,பெண் அனைவரும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் எப்படிக் கலந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும் முதன் முதலாகத் தொடர்ந்தாற் போல, அவைகளுக்கென்று ஏற்படுத்தப்பட்ட பரீக்ஷார்த்த வேலைகள் (பல வகையான அப்பியாசங்கள்) அக்டோபர் மாதம் 5-ந் தேதியிலிருந்து 14-ந்தேதி வரையில் நடைபெறும். பஞ்சாப் மாகாணத்தில் உள்ள அநேக பிரதான நகரங்கள் உட்பட, வடமேற்கு இந்தியாவின் பெரும்பாகங்களில் குறித்த அப்பியாச வேலைகள் பரிக்ஷை செய்து பார்க்கப்படும் என்று பத்திரிகைக்கு வெளியிடப்பட்ட அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

## இந்தியப் பாதுகாப்புக்கடன் நிதி

இரண்டாவது முறையாக வெளியிடப்பட்ட பாதுகாப்புக் கடன் நிதிக்காக சென்ற ஆகஸ்ட் மாதம் 30ந் தேதி வரையில் 1,32,90,700 ரூபாய் மொத்தமாகச்சேர்ந்திருக்கிறது.சென்ற 1940–ம் வருடம் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1941ம்வருடம ஆகஸ்ட் மாதம் 30க் தேதி முடிய அகில இந்தியப் பாதுகாப்புக் கடன் நிதிக்கு மொத்தம் 8,27,906 ஆயிரம் ரூபாய்கள் சேர்ந்திருக்கின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

## விமான விபத்து

அம்பாலாவில் இருந்த இந்திய ஆகாயப் படையைச் சேர்ந்த ஒரு விமானம் சென்ற 4–ந் தேதி ஜலந்தருக்கு அருகில் விபத்துக்குள்ளாகித் தகர்ந்து விட்டதென்றும், அதன் காரணமாக விமானச் சாரதி சார்ஜண்ட் எச். ஆர். ஹார்லி கொல்லப்பட்டார் என்றும், விமானத்திலிருந்த மற்றொரு விமானச் சாரதி உத்தியோகஸ்தர் சேரலா ராசராவ் மிகவும் அபாயகரமான காயத்திற்குள்ளானர் என்றும் இந்திய அரசாங்க அறிக்கை அறிவிக்கிறது.

## பதவி ஏற்றார்

வைஸ்ராய் நிர்வாகசபையின் சட்ட அங்கத்தவர் பதவியை, இப்பதவிக்குப் புதியதாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸேர். சுல்தான் அகமத் இம்மாதம் 5-ந் திகதி பிற்பகல் தந்தி மூலமாக ஸேர். மகமது ஷாபுருல்லா கான் (சட்ட அங்கத்தவராயிருந்தவர்) பொறுப்பிலிருந்து ஏற்றுக்கொண்டு விட்டார்.

## பம்பாய்-புனா புகைரதம்

செப்டெம்பர் மாதம் 2-ந் திகதி மாலை பம்பாயிலிருந்து புனுவுக்குச் சென்ற புனாமெயில வழியில் திரும்பிவிட நேர்ந்தது.

மலையிலிருந்து பாறைகள் சரிந்து பாதையில் விழுந்துவிட்டன. அதனால், எஞ்ஜின் சற்றுச் சேதமடைந்தது.

பம்பாய்க்கு அடுத்தநாட் காலை போய்ச் சேரவேண்டிய வண்டிகள் மாலையிற்றான் போய்ச்சேருமெனத் தெரிகிறது. பம்பாயிலிருந்து சென்னைக்குப் புறப்பட்ட எக்ஸ்பிறஸூம் மெயிலும் டோண்ட் மனமாட் பக்கம் போயின. 3-ந் திகதி சில வண்டிகள் நீக்கப்பட்டன.

## உண்ணுவிரத நிறுத்தம்

காந்திஜியிடமிருந்து உத்தரவு கிடைத்ததின்பேரில் நாகபுரிச்சிறையிலுள்ள "ஸி"வகுப்பு ராஜீயக்கைதிகள் இப்போழுது தங்கள் உண்ணுவிரதத்தை நிறுத்திவிட்டனர்.

மேற்படி கைதிகளின் தொகை மொத்தம் 290. இவர்களிற் சிலர் ஆகஸ்ட் மீ 13-ந் திகதி அரசாங்கத்துக்கு ஒருகடிதம் எழுதினர். தங்களுக்குப் பால் கொடுக்கப்பட்டு வந்தமை இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறதென்றும் அதைத் திரும்பக் கொடுக்காவிட்டால் தாங்கள் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்குமென்றும் அவர்கள் பயமுறுத்தியிருந்தனர்.

கோடைக்காலத்துக்குச் சௌகரியமாக இருப்பதற்காகவே பால் கொடுக்கப்பட்டதென்றும் கோடை காலம் தீர்ந்துவிட்டால் இனிமேல் அந்தவசதி கிடைக்காதென்றும் அரசாங்கத்தார் பதிலளித்தனர். அதன் பேரில் மேற்படி விஞ்ஞாபனத்தை விடுத்த 12 பேர்களும் மாலைச்சாப்பாடு உட்கொள்ளமறுத்துவிட்டனர்.

காந்திஜியின் கட்டளையின் பேரில் செப்டம்பர் மீ 1-ந் திகதிமுதல எல்லோரும் உணவருந்தினர். அதற்கு முதனுள் ராஜீயக்கைதிகளும் நாள் முழுவதும் உபவாசம் அனுஷ்டித்தனர்.

## இந்தியர் குடியேற்றம்

### மகாநாட்டிற் பூர்வாங்க விவாதம்

வெள்ளிக்கிழமை 2 மணி நேரம் மகாநாடு

இந்தியர் குடியேற்ற விஷயம்பற்றி மறுபடியும் சென்ற வெள்ளிக்கிழமை காலை $10\frac{1}{2}$ மணிக்குப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.

இலங்கைத் தூதுக்கோஷ்டியின் தலைவரான விவசாய மந்திரி மிஸ்றர் டி. எஸ். சேனநாயகாவின் விசாலமான காரியாலயத்தில் மகாநாடு நடைபெறுகின்றது.

மிஸ்றர். சேனநாயகா தமது காரியாலயத்திற்கு முதன் முதலில் வந்து சேர்ந்தார். பின்னர்க் காலை 10 மணிக்குப்பிறகு இலங்கைத் தூதுக் கோஷ்டியின ஏனைய அங்கத்தவர்களில இருவரான தொழில மந்திரி மிஸ்றர். ஜி. ஸி. எஸ். கொரியாவும் சட்டக்காரியதரிசி மிஸ்றர். ஆர்.எச். டிரேட்டனும் வந்து சேர்ந்தனர். மிஸ்றர். ஆர். எச். டிரேட்டன் பல புத்தகங்களையும் கொண்டு வந்திருந்தார்.

### மகாநாடு ஆரம்பம்

இந்தியத் தூதுக்கோஷ்டியினர் காலை 10-25 க்கு அரசாங்கக் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்தவுடன் அவர்களை இலங்கைத் தூதுக்கோஷ்டியின் காரியதரிசியான மிஸ்றர் எல். ஜே. சேனவிரத்ன வரவேற்பு மாடியிலுள்ள மகாநாடு நடைபெறும் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சரியாக $10\frac{1}{2}$ மணிக்குப் பேச்சுக்கள் ஆரம்பமாயின. அறையின் கதவுகள் சாத்தப்பட்டு விட்டன.

இந்திய தூதுக்கோஷ்டியில் தலைவர் ஸேர். கிரிஜா சங்கர் வாஜ்பேயி, ஸேர். மிர்ஸா இஸ்மாயில், மிஸ்றர். டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி, மிஸ்றர். டி. ஜி. ருதர்போர்ட் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

மிஸ்றர். ஜி. எஸ். போஜ்மனும் மிஸ்றர். ஏ. விக்தல்பாயும் உத்தியோகப் பற்றுள்ள ஆலோசனையாளர்களாகவும் இலங்கையில் இந்திய ஏஜெண்டாக விருக்கும் மிஸ்றர். டி. என். எஸ். இராகவன் இந்திய தூதுக்கோஷ்டியின் காரியதரிசியாகவும் தூதுக் கோஷ்டிக்கு உதவி பணிகின்றனர்.

### மகாநாடுபற்றி அறிக்கை

வெள்ளிக்கிழமை மகாநாடு 2 மணிநேரம் நடைபெற்றது. கூட்ட முடிவில் இலங்கைத் தூதுக்கோஷ்டியின் காரியதரிசியான மிஸ்றர். எல். ஜே. சேனவிரத்ன பின்வருமாறு ஓர் அறிக்கை வெளியிட்டார்.

"இரு தேசப் பிரதிநிதிகளும் சந்தித்தனர். குடியேற்ற விஷயம் பற்றி ஒரு பூர்வாங்க விவாதம் நடைபெற்றது. பேச்சுக்கள் நாளைக் காலை 10 மணிக்கு மீளவும் தொடர்ந்து நடைபெறும்."

மலவே எதிர்பார்த்தபடி பேச்சுக்கள் 15 நாட்கள் வரையில் நடைபெறுமெனத் தெரிகிறது.

## பணமும் நகையுந் திருட்டு

### எதிரிக்குத் தீர்ப்புக் கூறுவது தவணையிடப்பட்டது

வட்டுக்கோட்டை மேற்கில் வசிக்கும் சன். S. குலேந்திரம் என்பவரின் வேலைக்காரனாகிய ஜோசெப்-வாசீன் என்பவன் ரூபா 300 பெறுமதியான நகைகளையும் காசையும் அவர் இல்லாத நேரத்தில் யன்னலை உடைத்து அறைக்குட் சென்று அலுமாரியைப் பலவந்தமாகத் திறந்து எடுத்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குவின்டன் பொனுண்டோ முன்னிலையிற் தொடரப்பட்டது.

சன் S. குலேந்திரம் கூறியவற்றின் சாரமாவது:-

நான் 4-9-41-ம் திகதி பிற்பகல் உடுவிலுக்குச் சென்றேன். அப்போது வீட்டுக் கதவுகள் யாவற்றையும் பூட்டிச் சென்றேன். என்னுடைய வேலைக்காரனாகிய எதிரி மாத்திரம் வீட்டில் இருந்தான். 5-9-41ம் திகதி காலை உபாத்தியாயர் கணபதிப்பிள்ளை யாரோ யன்னலை உடைத்துக் களவெடுத்ததாக அறிவித்தார். நான் சென்று பார்த்தபோது, யன்னற் கம்பிகள் இரண்டு முறிக்கப்பட்டிருந்தன. அறையினுள் இருந்த அலுமாரி திறந்திருந்தது. அலுமாரியில் வைக்கப்பட்ட காசு ரூபா 117-75 சதத்தையும் நகைகள் ரூபா 180-25 சதம் பெறுமதியானவைகளும் காணப்படவில்லை. நான் பொலீசாருக்கு அறிவித்தேன். நான் ஒருவரிலுஞ் சந்தேகங் கொள்ளவில்லை. பின்னர்ப் பொலீஸார் காசையும் நகைகளையுங் கண்டுபிடித்தனர்.

1596ம் இலக்கச் சார்ஜன் சில்வா கூறியதாவது:-

நான் முறைப்பாட்டை விசாரணை செய்யச் சென்றிருந்தேன். அங்கே யன்னற் கம்பிகளும் அலுமாரியும் பலவந்தமாக உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். எதிரியினுடைய வாய்முறைப்பாட்டைக் கொண்டு முறைப்பாட்டுக் காரனுடைய வீட்டிலிருந்து 400 யார் தூரத்தக்கப்பால் களவுபோன சாமான்கள் ஒரு தகரப்பெட்டிக்குள் வைத்து மண்ணிற் புதைத்து வைக்கப்பட்டிருந்ததை எடுத்தேன்.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரியைக் கைவிரலடையாளம் கொடுக்கும்படி கூறித் தீர்ப்புக்கூறுவதை வருகிற 12-9-41ம் திகதிக்குத் தவணையிட்டார். எதிரி 300 ரூபாப் பிணையில் விடப்பட்டிருக்கிறான். ந-கி.

## ருஷிய அறிக்கை

### போர்முனை எங்கும் உக்கிரமான போர்

மொஸ்கோ செப் 6—

"எல்லாப் போர்முனைகளிலும் நமது துருப்புகள் செப்டம்பர் மாதம் 5-ம் தேதி, சத்துருவை எதிர்த்துச் சண்டை செய்தன" என்று நடு இரவில் மொஸ்கோவிலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் ஓர் ஸோவியத் அறிக்கை கூறுகிறது. ஜெர்மன் துருப்புகளுக்குப் பின்னணியில் ஸோவியத் குதிரைப்படை ஊடுருவிச் சென்று ஜெர்மனியின் திரு பட்டாளங்களையும், 'சப்ளை' வேலைகளைக் கவனிக்கும் ஜெர்மன் துருப்புகளையும் நாசம்செய்துவிட்டு எதிரிகளின் கையில் அகப்படாமல வெற்றிகரமாகத் திரும்பிவிட்ட விவரங்களைப்பற்றி மற்றோர் ஸோவியத் அறிக்கையில் குறிக்கப்பட்டிருக்கிறது.

## புதிய பட்டின சங்கங்கள்

சுயஆதாபன நிர்வாக மந்திரி சபையாரால் சிபாரிசு பண்ணப்பெற்ற யு. சி. எனப்படும் புதிய பட்டின பரிபாலன சங்கங்கள் அநேகப் பட்டினங்களிலே 1943-ம் ஆண்டு தைமாச முதல் ஸ்தாபிக்கப்படுமெனத் தெரியவருகிறது. இந்த மந்திரிசபை சமீபத்திலே தனது கூட்டமொன்றில், இலங்கையின் நாலுபகுதிகளிலும் பத்தொன்பது புதிய பட்டினசங்கங்கள் ஸ்தாபிப்பதை அங்கீகரிக்கலாயிற்று. வடமாகாணத்திலும் கிழமாகாணத்திலும் மன்னார், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, கல்முனை என்னும் பட்டினங்களிலே பட்டின சங்கங்களும், பேசாலை, எருக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, என்பனவற்றிலே கிராமசங்கங்களும் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், தலைமன்னார், வவுனியா, முல்லைத்தீவு, ஏறூர், காத்தான்குடி, சம்மாந்துறை என்பன சுகாதாரச்சங்க பரிபாலனத்தின் கீழ் இருந்துவரவேண்டுமென்றும் சுயஆதாபன ஆட்சிச் சங்கக் கொம்மிஷனர் இப்போது சிபாரிசு செய்திருக்கின்றார்.

## இந்திய தூதுக்கோஷ்டியின் இலங்கை விஜயம்

### கோட்டைப் புகைரதநிலயத்திற் குதூகல வரவேற்பு

#### ஸேர், வாஜ்பேயரின் பாராட்டு

இலங்கை-இந்திய மகாநாட்டிற் கலந்து கொள்வதற்காகச் சென்ற வியாழக்கிழமை காலை இந்தியப்பிரதிநிதிகள் தலைமன்னாரப் புகைரதத்திற் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர். கோட்டைப் புகைரத நிலையத்தில் இவர்களுக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.

இந்திய தூதுக்கோஷ்டியினரைத் தேசாதிபதியின் சார்பாக அவரது அந்தரங்கக் காரியதரிசிகளான மிஸ்டர், எச். ஏ. ஸி. டாப்ஸ், மிஸ்டர், டப்ளியூ. டி. பாரன் ஆகிய இருவரும் வரவேற்றனர்.

மிஸ்டர் எஸ். ஜே. சேனவிரத்ன இலங்கைப் பிரதிநிதிகளின் சார்பாக இந்தியப் பிரதிநிதிகளை வரவேற்றார்.

புகைரத ஜெனறல் மனேஜர் மிஸ்டர். டப்ளியூ. ஜீ. ஹில்ஸும் புகைரத நிலையத்துக்கு வந்திருந்தார்.

ஏற்கெனவே அறிவித்த பிரகாரம் இந்தியத் தூதுக்கோஷ்டியில் ஸேர். கிரிஜாசங்கர் வாஜ்பேயர் தலைவராக இருக்கிறார். ஸேர். மிர்ஸா இஸ்மாயில் மிஸ்டர் டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி மிஸ்டர். டி. ஜீ. ருதர்போட் ஆகியோர் ஏனைய அங்கத்தவர்களாவர்.

மிஸ்டர். ஜீ. எஸ். போஸ்மன், மிஸ்டர் ஏ. வித்தல்பாய் (இலங்கையில் முன்பு இந்திய ஏஜெண்டாயிருந்தவர்) ஆகியோர் மேற்படி தூதுக்கோஷ்டியோடு உத்தியோகப்பற்றுள்ள ஆலோசகர்களாக வந்திருக்கின்றனர்.

### தலைமன்னாரில் வரவேற்பு

இந்தியத் தூதுக்கோஷ்டியினர் சென்ற புதன்கிழமையன்று பின்னேரம் தலைமன்னாருக்கு வந்து சேர்ந்ததும், உதவிப் பிரதம காரியதரிசி மிஸ்டர். பி. எம். ரெனிஸன் இலங்கையிலுள்ள இந்திய அரசாங்க ஏஜெண்ட் மிஸ்டர் T. N. S. இராகவன் ஆகியோரால் வரவேற்கப்பட்டனர். மிஸ்டர். டி. என் எஸ். இராகவன் இந்திய தூதுக்கோஷ்டியின் காரியதரிசியாகத் தற்காலிகமாகக் கடமையாற்றுவார்.

### கோட்டைப் புகைரத நிலயத்தில் ...

தூதுக்கோஷ்டியினர் வந்த புகைரதத்தில் 1½ மணிநேரம் தாமதித்தே கோட்டைப் புகைரத நிலயத்துக்கு வந்து சேர்ந்தது.

பிரதிநிதிகள் தாம் பிரயாணஞ் செய்த விசேஷ ஸலூன் வண்டிகளிலிருந்து வெளியில் இறங்கியதும் உத்தியோகப்பற்றுள்ள பிரதிநிதிகளால் வரவேற்கப்பட்டனர். பின்னர்ப் புகைரத நிலயத்தில் திரளாகக் கூடியிருந்த இந்திய சமூகத்தினர் இந்தியப் பிரதிநிதிகளுக்கு மாலைகளை அணிவித்து அவர்களை வரவேற்றனர்.

திரு. பெரிசுந்தரம் இலங்கை இந்தியக் காங்கிரஸின் சார்பாக ஸேர். ஜீ. எஸ். வாஜ்பேயருக்கு மாலை சூட்டினார். அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த வேறுசில பிரமுகர்கள் ஏனைய இந்தியப்பிரதிநிதிகளுக்கு மாலைகளைச் சூட்டியிருந்தார்.

மிஸ்டர்.எப். எப். ரனி இலங்கை முஸ்லிம் லீகின் சார்பாக மிஸ்டர். ஏ. என். ஜேமன் தாழ்த்தப்பட்டோரது காங்கிரஸின் சார்பாகவும் தூதுக்கோஷ்டியினருக்கு மாலைகளைச் சூட்டினர். இலங்கை இந்திய மருத்துவர் சங்கம் திருநெல்வேலி டிஸ்திரிக் ஆதிதிராவிட மகாஜன சங்கம் ஆகிய ஸ்தாபனங்களும் இந்தியப் பிரதிநிதிகளுக்கு மாலை சூட்டின.

மலர்மாலைகள் சூட்டப்பட்ட பின்னர்ப் பிரதிநிதிகளைப் பத்திரிகைக்காரர்களும் மற்றவர்களும் புகைப்படம் பிடித்தனர், பின்னர் அவர்கள் தமக்காகப் புகைரத நிலயத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்த கார்களில் ஏறிக் கோல்பேஸ் ஹோட்டலுக்குச் சென்றனர். அவர்கள் அங்கு இலங்கை அரசாங்கத்தின் விருந்தினராக இருப்பார்கள்.

அவர்களுடைய சாமான்கள் ஒரு லொறியில் ஹோட்டலுக்குக் கொண்டு போகப்பட்டன.

இந்தியப் பிரதிநிதிகளின் சொந்த உதவியாளர்களாக ராவ்சாஹிப் ஓ. வி. கம்பியார், மிஸ்டர். என். குப்தா, மிஸ்டர். தங்கசாமி சிந்தவாசி ஆகியோர் வந்திருக்கின்றனர். திருவாளர்கள் சாரியும் இராமகிருஷ்ணஐயரும் சுருக்கெழுத்தாளர்களாக வந்திருக்கின்றனர்.

பொலீஸ் சுப்பிறிண்டெண்ட் மிஸ்டர். ஜீ. எஸ். பேக்கர் தலைமையில் ஒரு பொலீஸ்படை புகைரத நிலயத்திற் கடமையாற்றிக் கொண்டிருந்தது.

### மகாநாட்டுக்கு வந்ததில் மகிழ்ச்சி

"இம்மாநாட்டை முன்னிட்டு நாம் இங்கு வந்திருப்பது எமக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது. இலங்கை அரசாங்கம் எங்களுக்குச் செய்திருக்கும் வசதிகளை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம். என் சார்பாகவும் எனது சகாக்களின் சார்பாகவும் நான் இதைச் சொல்லுகிறேன்."

ஸேர். கிரிஜாசங்கர் வாஜ்பேயரை ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி கண்டு பேசியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார். தூதுக்கோஷ்டியினர் எவ்வளவு காலம் இலங்கையிலிருப்பார்கள் என்பது பேச்சுவார்த்தைகளைப் பொறுத்த விஷயம் என்று அவர் கூறினார்.

இலங்கை-இந்தியப் பேச்சுவார்த்தைகளின் பின்னர்த் தாம் சிம்லாவுக்குள் சென்று அதன் பின்னர்த் தான் தமது புதிய பதவியை ஏற்பதற்கு வாஷிங்டனுக்குச் செல்வதாக ஸேர். வாஜ்பேயர் கூறினார்.

ஸேர். வாஜ்பேயர் வியாழக்கிழமையன்று காலை 10½ மணிக்கு இராணி மாளிகையில் தேசாதிபதியைச் சந்தித்தார்.

இராணிமாளிகைக்குச் செல்வதற்கு முன்னர் அரசாங்கசபை முதல்வர் ஸேர். பரன் ஜயதிலகா அவரைச் சந்தித்தார்.

இலங்கை-இந்தியப் பேச்சு வார்த்தைகள் வெள்ளிக்கிழமை காலை 10½ மணிக்கு விவசாய மந்திரி காரியாலயத்தில் ஆரம்பமாயிருக்கிறது.

## கவியரசர் தாகூர்

### மிஸ்டர் மெயிஸ்கி பாராட்டு

லண்டன் செப் 5—

நேற்று இரவு லண்டனில், மகாகவி தாகூரின் ஞாபகார்த்தமாக ஓர் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் லண்டனில் ஸோவியத் அரசாங்க ஸ்தானிகராக இருக்கும் மிஸ்டர் மெயிஸ்கி பேசும்போது 'மனித சமூகத்தின் மீது இப்பொழுது அந்தகாரம் கவிந்திருக்கிறது. இந்த இருட் படலங்களுக்கு இடையே கலைப்பண்பின் உன்னதமான அவதாரியும், மானிட சமூகத்தின் உயர்ந்த லட்சியங்களின் பிரதிநிதி புருஷருமாகிய ஸ்ரீ தாகூரின் ஜோதி சொரூபம், இப்பொழுது நம் கண்முன் கிளர்ந்தவரும் கொலைத்தொழில் ஒரு முடிவைப் பெறும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது' என்று குறிப்பிட்டார். குறித்த கூட்டத்துக்கு மிஸ்டர் எட்வேட் தொம்ஸன் தலைமை வகித்தார்.

## யுத்த நிலைமை ருஷியருக்குச் சாதகமாக மாறுகிறதா?

### விச்சி கப்பலைப் பிருத்தானிய நாசகாரி பிடித்தது

வாஷிங்டன், செ 6

'கிரீயர்' எனும் அமெரிக்க நாசகாரிக் கப்பலை ஒரு 'யூபோட்' தாக்கிய சம்பவத்தை அமெரிக்கப் பத்திரிகைகள் யாவும் பெரிய எழுத்துக்களில் தலையங்கம் கொடுத்துப் பிரசுரம் செய்திருக்கின்றன. 'கிரீயர்' கப்பல் படம், அதன் கப்டின் படம் ஆகியவைகளை அமெரிக்கப் பத்திரிகைகள் பிரசுரஞ்செய்திருக்கின்றன. குறித்த பத்திரிகைகள் கொடுத்துள்ள செய்தித் தலைப்புகளிற் சில இவை:- ஐக்கிய அமெரிக்கக் கப்பல்களை மேலும் நீர்மூழ்கிகள் தாக்கலாமென அஞ்சப்படுகிறது" "நீர்மூழ்கியுடன் சமர்செய்த யுத்தக் கப்பல்."

சிப்பந்திகள் கூறுவதென்ன?

கிரீயர் கப்பலின் அதிகாரிகளும், சிப்பந்திகளும், தங்கள் கப்பலைத் தாக்கிய நீர்மூழ்கியை அநேகமாக ஆழ்த்தியோ, அல்லது சேதப்படுத்தியோவிட்டதாக அவர்கள் நம்புவதாக அறிவித்துள்ளார்கள். குறித்த சமர் நடந்த இடத்தில் தோன்றிய பிருத்தானிய விமானம் வேடிவேலையில் குறித்த கப்பலுடன் ஒத்துழைத்தது என்றும், நீர்மூழ்கியைத் தொலைக்கும் முயற்சியில் 'கிரீயர்'க் கப்பல் எத்தனையோ 'டெப்த்சார்ஜ்' எனும் குண்டுகளைப் பிரயோகித்ததாகவும் கூறப்படுகிறது.

விச்சி கப்பல் பிடிபட்டது

'அஜிக்' எனும் 2,000 தொன் நிறையுள்ள விச்சி உதவிக்கப்பலை, பிரெஞ்சுக் கடற்கரைக்கு அருகே, போர்டக்ஸிலிருந்து கஸபலாங்காவுக்குப் போகும் பாதையில் ஒரு பிருத்தானிய நாசகாரி கைப்பற்றியது என்று அதிகார சம்பந்தமற்ற ஒரு செய்தி கூறுவதாக நியூயோர்க் செய்தி சொல்லுகிறது.

ஸோமாலிலந்தில் உணவுப் பஞ்சம்

பிரெஞ்சு ஸோமாலிலந்தில் உணவுப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. புதிய உணவு வசதி கிடைக்காது போனால், இன்னும் பல வாரங்களுக்குப் பிரெஞ்சு சோமாலிலந்தின் பிடிப்பது கஷ்டந்தான் என்று ஜிபூதியிலிருந்துகெய்ரோவுக்குச்சமீபத்தில் வந்துள்ள பிரெஞ்சுக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

பல்கேரியாவின் போக்கு

அச்சுநாடுகளிடம் பல்கேரியாவுக்குள்ள "விசுவாசத்தை" நிச்சயப்படுத்தும் விதத்தில், பல்கேரியா பார்லிமெண்டின் அயல்நாட்டு விவகாரக் கொமிஷன் நேற்று ஒரு அறிக்கையைவெளியிட்டிருப்பதாக விச்சி நியூஸ் ஏஜென்ஸிக்குக்கிடைத்துள்ள ஸோபியா செய்தி கூறுகிறது.

ஸூயஸ் கால்வாய் தாக்குதல்

சென்ற வியாழனன்று இரவு ஸூயஸ்கால்வாயைச் சத்துரு விமானங்கள் தாக்கின. பலம் பொருந்திய வெடிகுண்டுகளும், அக்கினிக் குண்டுகளும் போடப்பட்டன. இருவர் கொல்லப்பட்டனர். மூவருக்குக் காயம், சேதம் சொற்பந்தான் என்று அதிகார சம்பந்தமுள்ள செய்தி கூறுகிறது.

தளபதியின் பரிசீலனை

மத்திய கிழக்குப் பிரதேசத்திலுள்ள பிருத்தானிய இராணுவக் கொமாண்டரான தளபதி சேர். வி. அச்சின்லக், பாலஸ்தீனம், ஸிரியா, ஸைப்பிரஸ் ஆகிய இடங்களில் ஆறு தினங்களாகச் சுற்றுப் பிரயாணம் செய்து பரிசீலனைகளை முடித்துவிட்டு இன்று கெய்ரோவந்து சேர்ந்தார்.

சத்துருக்கப்பல் நாசம்

இத்தாலியக் கடற்கரைக்கு அருகே, தெற்கே சென்ற பெரிய சத்துருக் கப்பல் ஒன்றைப் பிருத்தானிய நீர்மூழ்கி டோர்ப்பிடோவால் தாக்கிற்று. அநேகமாக அக்கப்பல் பாதாளத்திற்குச் சென்றிருக்குமென்று பிருத்தானிய கடற்படை அறிக்கை ஒன்று கூறுகிறது. குறித்த கப்பல் அநேகமாக 23,636 தொன் நிறை கொண்ட டியூலியோ என்ற கப்பலாக இருக்கலாம்.

ஸிஸிலிக்கு அருகே மற்றொரு சத்துருக்கப்பலைப் பிருத்தானிய நீர்மூழ்கி டோர்ப்பிடோவுக்கு இரையாக்கிற்று. அக்குவின் டினியா என்ற மற்றொரு இத்தாலியக் கப்பல் டோர்ப்பிடோவினுற் பலத்த சேதமடைந்தது. மத்தியதரைக் கடல் நடுவில் 800 தொன் நிறையுள்ள வேறொரு இத்தாலியக் கப்பல், பிருத்தானிய நீர்மூழ்கியால் ஆழ்த்தப்பட்டது.

டிரிப்போலித் துறைமுகத்துக்கு வெளியே பிருத்தானிய கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் எதிரிபக்க நாசகாரி ஒன்றைத் தாக்கி ஆழ்த்திற்று. ஒரு பெரிய வர்த்தகக் கப்பல்மீது வெடிகுண்டுகளை வீசின. மெஸீனியா ஜலசந்திக்கு அருகே பிருத்தானிய நீர்மூழ்கி ஒன்று சத்துரு கடற்படையை வெற்றிகரமாகத் தாக்கிற்று. எதிரியின் குரூய்ஸர்களில் ஒன்றும் 10000 தொன் நிறையுள்ளமற்றொரு ஆயுதந்தாங்கிய கப்பலும் பலமாகச் சேதமாக்கப்பட்டன என்றும் பிருத்தானிய கடற்படைப்பகுதி அறிக்கை கூறுகின்றது.

## மிஸ்டர் குணசிங்காவின் தேர்தல் தள்ளுபடி

### சரியான முறையில் தேர்தல் நடக்கவில்லை யென நீதிபதி தீர்ப்பு

#### மிஸ்டர். குணசிங்கா நகரசபை அங்கத்தவர் பதவியை இழந்தார்

கொழும்பு, செப் 3—

"லஞ்சித இடைஞ்சலும் அல்லது இடைஞ்சலேற்படுமோ என்ற அச்சமும் இன்றி வாக்காளர் தேர்தல் நிலையத்துக்குச் செல்லுவதற்கு அவருக்குள்ள உரிமை மிகவும் மோசமான முறையில் மீறப்பட்டது."

என்றிவ்வாறு நீதிபதி மிஸ்டர். ஹோர்ண், மருதானை தெற்கு வட்டுக்கு மிஸ்டர் A. E. குணசிங்கா தேர்ந்தெடுக்கப்பட்டமையை ஆட்சேபித்து மிஸ்டர் எச். ஏ. டி. பெரேரா தொடர்ந்த மனுசம்பந்தமாக அளித்துள்ள தீர்ப்பிற் குறிப்பிட்டார். மிஸ்டர் A. E. குணசிங்காவின் தேர்தல் நீக்கிவைக்கப்பட்டது.

### தீர்ப்பு விபரம்

"டிசம்பர் மீ 14ம் திகதிக்குமுன்பாக வாக்காளர்கள் அவர்களுடைய வீடுகளிற் பயமுறுத்தப்பட்டனரென்று மனுதார் தமது சாக்ஷியத்திற் கூறியதை நிரூபிக்கப் போதுமான இருசம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. கடைகள் சூறையாடப்பட்டன வென்ற மனுதாரின் கூற்றுக்கு ஆதாரமாக டிசம்பர் மீ 12ந்திகதி போர்ப்ஸ் ரோட்டிலுள்ள மலையாளிகளின் கடைகள் சூறையாடப்பட்டன வென்பதற்குப் போதிய சாட்சியங்கள் இருக்கின்றன.

மலையாளிகள் டக்டர் டி. சொய்ஸாவை ஆதரித்தால் அவர்களைத் தேர்தல் ஸ்தலத்திற்குச் செல்லாமல் தடுக்கவே இவை செய்யப்பட்டனவென்பதில் ஐயமில்லை.

செக். ஜோசெப் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குப்பதிவு ஸ்தலத்திற் பிரதிவாதியின் ஆட்கள் நின்று கொண்டு டக்டர் டி. சொய்ஸாவுக்கு வாக்களிப்பவர்களை ஏசியும் பயமுறுத்தியும் தொந்தரவு செய்ததோடு தேர்தல் ஸ்தலத்தில் அவர்கள் நுழைய விடாமலுந் தடுத்தனர்.

9 வாக்காளர்களின் சாக்ஷியங்களைத் தவிர வித்தியாதரிசி ஜயதிலகா, மிஸ்டர் பேக்கர், செலஸி ரோவன், ஸ்ரீமதி பார்ட்லம் முதலிய பிரமுகர்களின் சாக்ஷியங்களும் தேர்தல் ஸ்தலத்தில் வாக்காளர்கள் பயமுறுத்தப்பட்டனர் என்பதை நிரூபிக்கின்றன. ஸ்ரீமதி பார்ட்லம் வாக்காளர்களின் வீட்டுக்குச் சென்று அழைத்த பொழுது அவர்கள் கூடவரமறுத்து விட்டனர். உடனே

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## அமெரிக்க நாசகாரி தாக்கப்பட்டது

### நீர்மூழ்கியின்மீது பதிலுக்குப் பதில் குண்டுப்பிரயோகம்

#### யுத்தத்தை நெருங்கச் செய்யும் சம்பவமா?

வாஷிங்டன, செப் 5

ஐஸ்லாந்துக்குத் தபால்கள் கொண்டு சென்ற "கிரீர்" என்ற ஐக்கிய அமெரிக்க நாசகாரியை ஒரு நீர்மூழ்கி தாக்கியதாகவும், ஆயினும் டோர்ப்பிடோக்கள் குறிதப்பிவிட்டதாயும் ஐக்கிய அமெரிக்க கடற்படைப் பகுதி இன்று அறிவித்தது.

"கிரீர்" பதில் தாக்குதல் நடத்தியது. அதனால் ஏற்பட்ட பலன் தெரியவரவில்லை. குறித்த தாக்குதல் இன்று காலையில் ஏற்பட்டதாகக் கடற்படைப்பகுதி அறிவித்தது.

யுத்தத்தை நெருங்கச் செய்யும் சம்பவம்

ஐக்கிய அமெரிக்க நாசகாரி ஒரு நீர்மூழ்கியாற் தாக்கப்பட்டமைபற்றி அசோஸியேற்றெட் பிறெஸின் வாஷிங்டன் நிருபர் பின்வருமாறு எழுதுகின்றார்:-

"ஐக்கிய அமெரிக்காவை யுத்தத்தை நெருங்கும்படி செய்யக்கூடிய ஒரு சம்பவம் வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டது. அவ்வித சம்பவம் பற்றிய செய்தி இப்பொழுது உலகெங்கும் பரவி விட்டது.

இச் சம்பவம்பற்றிப் பேர்லினில் ஜெர்மானியர் தங்களுக்கு ஒன்றும் தெரியாதென மறுக்கின்றனர். வாஷிங்டனிலுள்ள தலைவர்கள் தேசம் அமைதியோடு இருக்க வேண்டுமென வற்புறுத்தினர். ஆயினும், சனங்கள் கிளர்ச்சி செய்வார்களோ என்று அவர்கள் அஞ்சுகின்றார்களென்பது வெளிப்படையாகத் தெரிந்தது.


## அசோக்குமாரில் நடிக்கும்



M. K. தியாகராஜ பாகவதர்

M. K. தியாகராஜபாகவதர், சித்தூர் V. நாகையா, P. கண்ணாம்பா, T. V. குமுதினி, N. S. கிருஷ்ணன், T. A. மதுரம் ஆகியோர் திறம்பட நடித்த இப்படம் இன்று தொடக்கம்

யாழ்ப்பாணம் வின்ஸர் படமாளிகையிற் காண்பிக்கப்படும்


## அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்.மேற்கு மு. சோம. அ. சோமசுந்தரஞ் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1939 செப்டம்பர் மீ

| இல. | உ | ரு | ச | ஊர் பெயர் நகையின் விபரம் |
|---|---|---|---|---|
| 1724 | 5 | 9 | | கன்னாதிட்டி அ. கந்தசாமி வெள்ளைக்கல் தோடுசோடி 1 |
| 1731 | 5 | 30 | | கோண்டாவில் மேற்கு க. தம்பித்துரை இமி கல் டிம்பியுடன் சங்கிலி அட்டியல் 1 |
| 1802 | 11 | 13 | | கொக்குவில் மேற்கு அ. சின்னத்துரை முருக்குப் பிள்ளைக் காப்பு சோடி 1 |
| 1815 | 12 | 15 | | நல்லூர் வ. தில்லையம்பலம் இமி கல் பதக்கம் 1 |
| | | | | நவம்பர் மாதம் |
| 2541 | 14 | 14 | | அராலி கிழக்கு பொ. வல்லிபுரம் இமி வெள்ளைக்கல் மோதிரம் 1 |
| 2547 | 16 | 16 | | சோனகதெரு பொ. தருமராசா மழுக்கன் சிகப்புக் கல் காதோலை சோடி 1 |
| 2693 | 27 | 6 | | நல்லூர் அ. செல்லையா கைச்சங்கிலி 1 |
| 2708 | 29 | 12 | | நல்லூர் க. விஸ்வலிங்கம் இமி வெள்ளைக்கல் சிறுதோடு சோடி 1 |
| | | | | டிசம்பர் மாதம் |
| 2781 | 4 | 35 | | வண்கிழக்கு வி. நாகலிங்கம் இமி. கல் மோதிரம் 2 |
| 2865 | 9 | 35 | | இணுவில் ச. கதிர்காமத் தம்பி செல்லப்பிள்ளைக்காப்பு சோ 1 |
| 3100 | 27 | 10 | 50 | வண்மேற்கு வே. வி. வேலுப்பிள்ளை சிமிக்கிவாளி சோடி 1ம் ஓடி குடம் 1 |
| | | | | 1940 ஜனவரி மாதம் |
| 3282 | 9 | 8 | 50 | ஆஸ்பத்திரி ரோட் R. M. G. ஜோகானிஸ் இமி நீலக்கல் மோதிரம் 1 |
| | | | | பெப்ரவரி மாதம் |
| 3659 | 4 | 82 | | புத்தூர் மேற்கு சின்னத்தம்பி முத்துச்சாமி சாதா பிலிக்காப்பு சோடி 1 |
| 3673 | 5 | 14 | | அராலி கிழக்கு க. துரைரெத்தினம் விலாசம் போட்ட ஆடுதன் மோதிரம் 1 |
| 3736 | 9 | 95 | | சோனகதெரு மு. முகம்மது அப்துல்காதர் இமி வெள்ளைக்கல் பெண்டனுடன் சங்கிலி அட்டியல் 1ம் அச்சுக்கம்பி வளையல் சோடி 1 |
| 3827 | 15 | 7 | | கீர்வேலி வடக்கு இ. கனகரத்தினம் தாலி 1 |
| 3942 | 24 | 23 | | இளவாலை ஞா. மதியாபரணம் இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1ம் இமி கல் காதுக்குச்சி சோடி 1 |
| | | | | மார்ச்சு மாதம் |
| 4025 | 2 | 6 | | துன்னாலை W. A. லோவல் இமி கல் மோதிரம் 1 |
| 4040 | 2 | 7 | | ஆனைக்கோட்டை இ. சின்னையா தாலி 1 |
| 4234 | 19 | 85 | | நவாலி தெற்கு அ. பிரான்சிஸ் இமி கல் செல்லுக்காப்பு சோடி 1ம் பிள்ளைக்காப்பு சோடி 1ம் கல் காதுக்குச்சி சோடி 1 |
| 4399 | 31 | 7 | | தட்டாதெரு சி. முத்துக்குமாரு வெள்ளைக்கல் பொட்டு 1 |
| | | | | ஏப்ரல் மாதம் |
| 4587 | 11 | 10 | | வண்மேற்கு க. பரமசிவம் இமி வெள்ளைக்கல் கடுக்கன் சோடி 1 |
| 4824 | 29 | 60 | | ஆவரங்கால் கா. தாமோதரம்பிள்ளை சாதா மல்லிகை மொட்டுக் காப்பு சோடி 1 |

விற்பனவு நிகழும் விஷு வருஷம் புரட்டாதி மாதம் 7-ந் தேதி (23-9-41) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்ட நகை பிறகிலாக மிருதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை
வெந்திஸ் மேஸ்தர்

(Mis 98, 8 & 11.9.41)

## NOTICE OF SALE
## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 16586ம் இலக்க வழக்கில் 1941ம் ஞு ஆவணிமீ 30ம் தேதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் 1941ம்ஞு ஐப்பசிமீ 4ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

கோண்டாவில் சின்னப்பு பொன்னுத்துரை — வழக்காளி,

Vs

1. வண்கிழக்கு கந்தப்பு தம்பிப்பிள்ளை கைம்பெண் தங்கம்மா தனக்காகவும் காலஞ்சென்ற தனதுபுருஷன் கந்தப்பு தம்பிப்பிள்ளையின் மூலறைமையான பிரதிகாரியாகவும் 2. வண்கிழக்கு ஐயாத்துரை பொன்னுத்துரை — எதிராளிகள்.

தீர்வைத் தொகை ரூபா 1691 சதம் 7½தும் இதற்கு 1941ம்ஆண்டு சித்திரை மாதம் 7ந் திகதி தொடக்கம் இறுக்கும் வரைக்கும் வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் 1ம் எதிரிபிடம் அறவிடப்படவேண்டியது.

காணி விபரம்

1ம் காணி வண்கிழக்கிறை "முல்லைக் கட்டையடி" பர. கில, இலா. 5 குளி 5½ உறுதிப்படி பர. கில, இலா. 5 குளி 5½ எல்லைகிழக்கு தம்பு நம்பிப்பிள்ளையும் பங்காளரும், வடக்கு தம்பையா கனகசபை, மேற்கு கீழே சொல்லப்படும் 2ம் காணி, தெற்கு ரோட்டு, வீடும் கொட்டிலும் செய்பயிர் வான்பயிர்களும், இந்தக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில், மேற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் பிறரிக்கலாக.

2ம் காணி வண்கிழக்கிறை "முல்லைக் கட்டையடி" பர. கில, இலா. 2 குளி 2 பனைகளும், கிழக்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும், வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு மேலே சொல்லப்படும் 1ம் காணியும், மாப்பாணர் இளையதம்பிக்கும் பெண் சிவக்கொழுந்துவுக்கும் விடப்பட்ட பாதை நிலமும், வடக்கு மேலே சொல்லப்பட்ட பாதைக்கு விடப்பட்ட நிலமும், மேற்கு மாப்பாணர் இளையதம்பியும் பெண் சிவக்கொழுந்துவும், தெற்கு ரோட்டு, மேற்கெல்லைக் காணிக்குத் தண்ணீர் வாய்க்காலெடுத்து இந்தக் காணிக்கூடாகத் தண்ணீர் பாய்ச்சும் உரித்து பிறரிக்கலாக.

சே. சந்திரசேகரம்,
கொம்மிஷனர்.

கொக்குவில், 1-9-41.
(Mis. 97, 8-9-41.)

# திருச்சிரேடியோ நிகழ்ச்சி

(மீ 396)

## செவ்வாய் செப்டம்பர் 9

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீரங்கம் எம். என். ராமஸ்வாமி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 நால் வகைகள் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. ஆர். விசுவநாதஐயர் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 ஸ்ரீரங்கம் எம். என். ராமஸ்வாமி 5 45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 டி. ஆர். விசுவநாதஐயர் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 நாமும் யுத்தமும் 7-15 என். ஸி. வஸந்தகோகிலம் (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழ்ச்செய்திகள் 7-50 மைதூர் வி. வெங்கடகிரியப்பா வீணை 9-00 விசிவான ரங்க 9-15 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

## புதன் செப்டம்பர் 10

காலை 7-30 கீதாரம்பம் (இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி. வி. ஏ. லக்ஷ்மி பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 திரைகானம் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 கதம்ப இசை (இசைத்தட்டு) 1-15 குமாரி துடாமணி (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி வி. ஏ. லக்ஷ்மி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 வாத்தியகீதம் 5.15 சேத்தூர் சுந்தரேசபட்டர் வயலின் 6-00 6-05 திட்டே கிருஷ்ணஐயங்கார் 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 பல்லடம் சஞ்சீவராவ் 7-15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 திட்டே கிருஷ்ணஐயங்கார் 8-40 சேத்தூர் சுந்தரேசபட்டர் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவுகளும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

## வியாழன் செப்டம்பர் 11

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 வி. எஸ். ராமஐயங்கார் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 பலர் விரும்புவது (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 படப்பாட்டுகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 வி. எஸ். ராமஐயங்கார் பாட்டு 2.00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

5-00 வாளாடி ஸ்ரீமதி. எஸ். ருக்மணி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 பாரதியாரின் மேதை 7-15 குயில் 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7-50 எம். எம். தண்டபாணி தேசிகர் 8-45 சஞ்சலசமனம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு

---

## மிஸ்றர் குணசிங்காவின் தேர்தல் தள்ளுபடி

மூன்றும் பக்கத்தொடர்ச்சி

அவர் தேர்தல் நிலையத்துக்குத் திரும்பிபொழுது தேர்தல் நிலையத்துக்கு முன்னால் வாக்காளரைப் பயமுறுத்திக் கொண்டிருந்த கோஷ்டியைக் கண்டார்.

### செஞ்சட்டைப் பேண்கள்

"வாக்காளர்களல்லாத செஞ்சட்டை மனிதர்களும் சிவப்புச்சட்டை அணிந்த ஸ்திரிகளும் வாக்காளர்களைத் தடுக்கவும் பயமுறுத்தவும் முன்னேற்பாட்டின்படியே அங்கு நிறுத்தப்பட்டிருந்தனர் என்பது எனது அபிப்பிராயம்.

ஒரு சில ஸ்திரிகளே தாங்கள் கட்சியைச் சேர்ந்த பிரதிவாதி உடியதற்கு விரோதமாக டாக்டர் கடாசுரு, பிரதம தேர்தல் அதிகாரி மிஸ்றர் பேக்கர், பொலிஸ் சுப்பிறிண்டெண்ட் முதலியோரின் சாக்ஷிபங்கள் இருக்கின்றன." என்று நீதிபதி தமது தீர்ப்பிற் குறிப்பிட்டார்.

மேலும் தீர்ப்பை முடிக்கும்போது நீதிபதி பின்வருமாறு கூறி முடித்தார்:-

வாக்காளர்கள் பயமின்றியும் தொந்தரவு செய்யப்படாமலும் வாக்குப் பதிவு ஸ்தலத்துக்குப்போய் வாக்களிக்கும் உரிமை மிகவும் கேவலமான முறையில் மீறப்பட்டதால் தாங்கள் விரும்பும் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் வாக்காளர்களுக்கு அளிக்கப்படவில்லை. உண்மையான தேர்தல் நடைபெறவில்லை யென்பது நிரூபிதமாக நிரூபணமாகிவிட்டது. எனவே, இத்தேர்தல் செல்லுபடியாகாதென நான் தீர்ப்புக் கூறுகிறேன்."

---


வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

## புடவைகள்

இப்போது யாழ்ப்பாணத்தில் ஒவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்துணிகள் |
| சேலைகள் | ரசூர்கள் |
| சாரங்கள் | 'ஷேட்' துணிகள் |
| கப்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | யன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127. 11-10-40—


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு பெ. அரு. மு. சி. முத்துச்சாமிச் செட்டியார் அன்பிரதர் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

| கம். | உ. | ரூ. ச. | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| | | | 1939-ம் ஆண்டு அக்டோபர் |
| 2242 | 19 | 25 | கிளிகொச்சி இ. கருப்பன் இமி கல் டிம்மி பதைக்கம் 1-ம் மருக்கன் சிகப்புக்கல் காதோலை சோடி 1 |
| 2379 | 30 | 12 50 | நவாலி கா சின்னத்தம்பி தாலி 1 |
| | | | நவம்பர் |
| 2615 | 18 | 6 | கள்ளியங்காடு அ செல்லையா கைச்சங்கிலி 1 |
| | | | டிசம்பர் |
| 3034 | 18 | 10 | கோண்டாவில் மேற்கு சு பொன்னுத்துரை இமி கல் தோடு [சோடி 1 |
| 3093 | 23 | 40 | உடுவில் மு. குணரெத்தினம் இமி கல் டிம்மி பதைக்கம் 1-ம் ஷை கல் கொண்டைப்பூ 1-ம் குண்டு வைத்த அரைப்பவுண் 2 |
| | | | 1940-ம் ஆண்டு ஜனவரி |
| 3246 | 5 | 70 | கன்னுதிட்டி மு முகம்மது மெய்தீன் மிளகு காப்பு சோடி 1 |
| †3333 | 12 | 50 | வண்கிழக்கு சி உலகநாதபிள்ளை இரண்டுபட்டுக் குண்டுமாலை 1 |
| | | | பெப்ரவரி |
| 3842 | 20 | 13 | கோப்பாய் வடக்கு இ சுந்தரம் இமி கல் டிம்மி பதக்கம் 1 |
| 3932 | 28 | 20 | சங்கானை கிழக்கு வே விஜயரெத்தினம் காட்டுக்கடுக்கன் சோடி 1 |
| | | | மார்ச்சு |
| 4340 | 27 | 215 | சுழிபுரம் க செல்லப்பா இமி கல் பதக்கத்துடன் கெட்டிப் பூரானட்டியல் 1-ம் சங்கிலி 1 |
| 4389 | 31 | 150 | சரவணை சி துரையப்பா இமி கல் முகப்புடன் கெட்டிக் காப்பு சோடி 1 |
| | | | ஏப்ரல் |
| 4660 | 17 | 95 | கோண்டாவில் கிழக்கு கா மார்க்கண்டு இமி கல் வைத்த மிளகு காப்புச் சோடி 1 |
| 4668 | 18 | 95 | வேலணை கிழக்கு க சபாபதிப்பிள்ளை முரிச்சிக்குத்தி அட்டியல் 1 |
| 4708 | 21 | 20 | காரைநகர் செ முருகேசு குண்டு முரிந்த இமி வெள்ளைக்கல் கொண்டைப் புரோச் 1 |
| 4834 | 30 | 20 | கச்சேரியடி க இராமலிங்கம் தாலி 1 |

விற்பனவு நிகழும் விஷு வருஷம் புரட்டாதி மீ 3-ம் தேதி (19.9.41) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்டநகை பிறகீங்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை
வெந்தீஸ் மேஸ்தர்

Mis 95 4 & 8.9.41

† இந்தத்தொகை சென்ற பிரசுரத்தில் ரூபா 05 எனத் தவறாக வெளிவந்துவிட்டது.


## புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

# குடி இயல் நூல்

இலங்கை
வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.
(அங்கீகார இலக்கம், 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.



## தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு: பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரொப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4.3.41—3.3.41





## மெலிந்து சோர்வுற்று பலமிழந்து ஊக்கமற்று இருக்கும சகலருக்கும் ஓர்விசேஷச் செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீரிழிவு, வாதம், தொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கிவிடும். கண்டிப்பாகம் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி ருசியுண்டாகும். நரம்புகள் வலுவடையும். கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y221 31-3.41—30.3.42



## யாழ்ப்பாண ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,36700**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Y 58 A. 21 11-40—20-11-41 (தி)



### விளம்பர விகிதம்

முதன் முறைக்கு
ஒருகலம் ரூபா 10.00 அரைக்கலம் ரூபா 5.00
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1.00
அடுத்த முறைகட்டு மேற்படி விகிதங்களிற் பாதி

### பத்திரக்கிரயம்

வருடம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினத்தக்க எல்லைக்குள் தமிழ் ரூபா 6.00 இங்கிலீசும் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீசும் தமிழும் 12.00
தொடுவாய்ப் பகுதி 9.00 இங்கிலீசும் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்



## N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.
Telephone No. 30.

(Y 20— 1-4-41—31-3-42) தி


## விபூதி மகிமை

1-ம் பக்கத் தொடர்ச்சி

கும் அபின்னநிமித்தோபாதான விவர்த்தகாரணமாயுமுள்ள பரமசிவத்தைக் குறிப்பாய் உணர்த்துவதே திருநீறும். ஆதலாற்றான விபூதியைப் பரமசிவதின் லிங்கமென்று வேதாகமங்கள் கூறுகின்றன.

தேவாரம்

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.
காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவாலவாயான் திருநீறே

இங்ஙனம் தேவாரங் கூறுகின்றது இங்குணர்தற் பாலது. அன்றியும்,

பகர்புனித நீறணியார் ஞானமடை யார்கோடி பாவமானுதுக்
தகர்தலுறச் சுபசார மாபாவ முடையராய்த் தாழ்வார்கும்பி
புகரில்வரு ஞச்சிரம பலமுறு ஏவரியற்றும் புனிதமான
நிகரில் புண்ணியமும் பாதகமா மென்றமறை நிகழ்த்துமாலோ

பலவப்பா விபுருக்கே நீற்றில் வெறுப் புண்டாகும் பண்பார் நீறைக், குலவுவுவ வரெல்லாமாபாவ ரெனத் தெரிந்து சொன்னவேண்டும், கலமுதிமமான மியஞ்சொலலெம் மாதுமற்றெம் முடையகுருசாதனுஞ், மலர்புகழீர் முடியுமோ முடியாதேக் காலதம் வாய்மை நீதே.

என்று சூதசங்கிதை கூறுவதைச் சற்று யோசிக்கின், விபூதியைத் தரிக்காதவர் ஆத்மலாட்சாத்காரத்தினை அடையாரென்றும், அவர்கள் என்றும் சமுசாரமாகிய "கும்பிபாக" நகரத்தில் ஆழ்ந்து வருந்துவரென்றும், அவர்களால் இயற்றப்படும் புண்ணியங்கள் யாவும் பாவமாய் முடியுமென்றும் தெள்ளிதாய்ப் புலப்படுகின்றது. ஆதலின் விபூதியை அலக்ஷியஞ் செய்தல் கூடாது.

இங்ஙனம் சுருக்கமாக விபூதியின் ஸ்வரூபம், திரவியம், வகைகள், பிரமாணம், தாரணவிதி முதலியன கூறப்பட்டன. இவற்றை நன்குணர்ந்து, ஸ்ரீ பரமேசுரனுடைய திருவடிவமென்று நினைத்த அவ்வழகிய விபூதியைக் கனவிலும் மறவாது தரித்தவரின் பஞ்சாக்ஷரதீப வடிவமாய் உள்ளே பரமேஸ்வரனைத் தரிசிக்கும் வாயிலாக நித்தியானந்தப் பெருவாழ்வை படைவரென்பது திண்ணம். பவரோகம் நீக்கவல்ல மருந்து இதைக்காட்டிலும் மற்றொன்று இல்லை என்பது இதனுலகனகு புலனாகும்.

—சைவசாஸ்திரபரிபாலனம்


## "காயகல்ப" அனுகூல சிகிச்சை

காயசித்தி, தத்துவக்குறைவு, சலரோகம், வாதம், சிறுபிள்ளை வாதம், வலி, தோற்புரை வியாதிகள், குட்டம், ஆதியாம் நோய்களுக்கு அனுகூலமான சிகிச்சை.

மேகராசா

சலரோகம், நீரழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரழிவு ஆகிய எக்ககிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து, பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 4-00.

சுண்டிக்குளித்தபாற்கந்தோர்த் தலைவர்பின்வருமாறெழுதுகிறார்:-

நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன் என் சலம் சுத்தமாகி விட்டது, இந்தச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்,

இங்ஙனம்,
P நடராஜா.

பின்வருவோரைக் கலந்தாலோசியுங்கள்:—

டக்டர் K. T. மங்களம்
R. I. M. P.
(சென்னை)
M. S. V. S. அங்கத்தவர்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
Q 82 7-8—6.11.41



## விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆரூடம் (சித்திரை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவகிலை முதலிய கணித வகைகளும், மகாதெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், காலசக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7.41—19-7.42


## திருவள்ளுவர் சமயம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சுத்தமாயா புவனுந்தஞ் சங்கரிக்குஞ் சங்காரகாரணனுகிய பரமசிவனே முதற் கடவுளெனும் முடிவுடைய சுத்தாத்துவித சித்தாந்த சைவநெறியைப் பின்பற்றி யொழுகிய பெரியாராதல் நன்கு தெளியப்படும் என்க. எனவே இத்தன்மையுங் கூறிய முடிவுகளால் ஆசிரியர் திருவள்ளுவரின் சமயமிதுவென ஒருவாறு தெரித்தாம். இன்னும் இவ்வுண்மைகளை ஆங்காங்குப் பல பெரியார்கள் ஆசிரியர் திருவள்ளுவர் தழுவியொழுகிய சமயமிதுதானென ஆய்ந்தெழுதிய ஆராய்ச்சிக்கட்டுரைகளின் வைத்து கண்டறிந்து கொள்ளலாம்.


## S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942)

# பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சைக்ஷ வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம்)
20.8.40 )

மனேஜர்.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்,

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday September 8th 1941